**வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி-2017**

---

வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் ("வங்கி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தல்**

எனது அபிப்பிராயத்தில், நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 15 இன் படி, வங்கியினது மொத்த சொத்துக்களின் 56 சதவீதமானது நிலையான வைப்புக்கள் மீதான முதலீட்டினை பிரதிநிதிப்படுத்துகின்றது என்பதனை உங்களது கவனத்திற்கு வெளிப்படுத்துகின்றேன். கடன்கள் மற்றும் முற்பணங்கள் மொத்த சொத்துக்களில் 44 சதவீதத்தினை மட்டும் பிரதிநிதிப்படுத்துகின்றது. வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்காமல் தனது பணத்தின் பாரிய பகுதியினை இடரில்லா வட்டி வீதத்தில் நிலையான வைப்பில் முதலீடு செய்துள்ளது. இது கைத்தொழில், விவசாயம், வணிகம், கட்டுமானம் மற்றும் ஏனைய முயற்சிகளுடைய மேம்பாடு, உருவாக்கம், விரிவாக்கம், நவீனமயமாக்கல் மற்றும் அபிவிருத்தி என்பவற்றிற்கு உதவுதல் எனும் வங்கியினுடைய முதன்மை நோக்கத்திற்கு முரண்படுகின்றது.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகளின் மீதான அறிக்கை

(i) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தின் படி,

கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வங்கியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் வங்கியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

(ii) 1998 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டம் மற்றும் பின்தொடர் திருத்தங்களினால் வேண்டப்பட்ட தகவல்களுக்கமைய இந் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம் - 18

இந்நியமத்தின் பந்தி 30 இன் படி, வட்டி வருமானமானது பயனுள்ள வட்டி முறையினை பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட வேண்டும். அதற்கு மாறாக நிதிக்கூற்றுக்களில் வங்கியானது குத்தகை வட்டி வருமானத்தினை காசு அடிப்படையில் அங்கீகரித்துள்ளது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(i) 31 திசெம்பர் 2017 இல் கொள்வனவுகள், காகிதாதிகள் மற்றும் மேம்படுத்தல் உருப்படிகள் மீதான பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டு பதிந்த மீதிகளுக்கும் பொதுப்பேரேட்டு மீதிகளுக்கும் இடையிலான வேறுபாடாக ரூபா 6,786,989 அவதானிக்கப்பட்டிருந்தது.

(ii) பொருத்தமான வாடிக்கையாளர் கணக்கில் செலவு வைக்கப்படாமல் அடையாளம் காணப்படாத வாடிக்கையாளர் வைப்பு கணக்கில் இணக்கப்பாடு செய்யப்படாத செலவு மீதியாக ரூபா 5,244,224 காணப்பட்டிருந்தது. 2008 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் மொத்த அடையாளம் காணப்படாத வாடிக்கையாளர் வைப்புக்களாக ரூபா 4,644,022 இருந்தது மற்றும் 2017 காலப்பகுதியில் ரூபா 600,202 அக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(iii) ஏனைய வங்கிகளில் வங்கியால் பேணப்படும் கணக்குகளுக்கு 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை நேரடியாக பெறப்பட்ட ரூபா 1,470,151 காசு மற்றும் காசோலை வங்கியினுடைய காசுப்புத்தகத்தில் 31 திசெம்பர் 2017 வரை சரி செய்யப்படவில்லை.

(iv) கடந்த நான்கு ஆண்டு காலப்பகுதிக்கான காசோலை திரும்பல் கட்டணங்கள், மாற்றல்கள் மற்றும் பிழையாக பதிந்த பதிவுகள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட திருத்தப்படவேண்டிய செலவு பதிவுகள் ரூபா 1,180,599 வங்கியினுடைய காசுப்புத்தகத்தில் 31 திசெம்பர் 2017 வரை சரி செய்யப்படவில்லை.

(v) செலுத்தப்படவேண்டிய முத்திரைக்கட்டண மீதியானது ரூபா 1,532,416 ஏனைய சொத்துக்களின் பெறுமதியால் எதிரீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 31 திசெம்பர் 2017 இல் நிதிக்கூற்றுக்களில் இத்தொகைக்கு சமமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதியானது குறைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(vi) நிதியாண்டு 2017 இற்கான கணக்காய்வு கட்டணமானது செலுத்தப்படவேண்டியுள்ளது.

(vii) நீண்ட காலமாக நிலுவையிலுள்ள செலவு மீதி மற்றும் வரவு மீதி முறையே ரூபா 21,711,204 மற்றம் ரூபா 2,564,854 ஆகியவை 2008 தொடக்கம் 2016 வரை முன் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலும் மீளாய்வின் போது இவை வருட இறுதி வரை தீர்ப்பனவு செய்யப்படவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்ககளிற்கு எதிராக குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற கூடியதாக காணப்படவில்லை.

| விபரம் | தொகை (ரூபா) | கிடைக்கப்பெற முடியாத கணக்காய்வுச் சான்றுகள் |
|---|---|---|
| கிளைகளின் களஞ்சியங்களிலுள்ள கொள்வனவுகள், காகிதாதிகள் மற்றும் மேம்படுத்தல் உருப்படிகள் | 2,994,757 | பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டு பதிந்த மீதிகள் |
| சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையின் கடன் கொடுத்தோர் | 1,432,019 | பற்றுச்சீட்டுக்கள் |
| மீளளிக்கக்கூடிய எரிபொருள் வைப்புக்கள் | 360,427 | வைப்புச்சீட்டுக்கள் |
| ஏனைய மீளளிக்கக்கூடிய வைப்புக்கள | 253,810 | வைப்புச்சீட்டுக்கள் மற்றும் அட்டவணைகள் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

---

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (I) | **2007 இன் 12 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டம்** | |
| (அ) | 3(2) ஆம் பிரிவு | இயக்குனர் குழுமம் குறைந்தபட்சம் 7 அங்கத்தவர்களை கொண்டிருக்க வேண்டும் எனினும் வங்கியானது தலைவர் உட்பட 6 அங்கத்தவர்களை இயக்குனர் குழுமத்தில் கொண்டிருக்கின்றது. |
| (II) | **பெறுகை வழிகாட்டு நெறிகள் 2006** | |
| (அ) | 4.2.2 ஆம் பிரிவு மற்றும் 4.2.3 ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகை கால அட்டவணை வங்கியினால் தயாரிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2.7.5 ஆம் பிரிவு | வங்கியினுடைய திணைக்களப் பெறுகை குழுவின் அங்கத்தவர்களின் நியமனமானது குறித்த பிரிவின் தேவைப்பாடுகளுக்கு முரணாக உள்ளது. |
| (இ) | 5.3.1 ஆம் பிரிவு | இப்பிரிவின் விதிமுறைகளின் படி, தேசிய வாங்குதலுக்கான தேசிய பெறுகை முகவர் நிலையத்தினுடைய வெளியீடான இலக்கம் PA/SBD இன் படி, விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் வங்கி அத்தேவைப்பாட்டுடன் இணங்கவில்லை. |
| (ஈ) | 6.3.3.b பிரிவு | புத்தாண்டு பரிசுகள் மற்றும் காசு எண்ணும் இயந்திரங்களை கொள்வனவு செய்யும் போது விலைக்கேள்வி மூடப்பட்ட பின் 3 நாட்கள் தாமதமாக விலைக்கேள்வி திறக்கப்பட்டது. |
| (உ) | 8.9.3 ஆம் பிரிவு | தீயரண் தீர்வு, சாளர (மென்பொருள்) அனுமதிப்பத்திரம் மற்றும 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை அச்சிடல் என்பவற்றினை கொள்வனவு செய்யும் போது வங்கிக்கும் தெரிவு செய்யப்பட்ட விலைக்கேள்வியாளர்களுக்கும் இடையில் ஒப்பந்த பெறுமதியான முறையே ரூபா 3,480,000 ரூபா 1,634,880 மற்றும் ரூபா 1,292,948 என்பவற்றிற்கு விதிமுறைப்படுத்தப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. |
| (ஊ) | 5.4.4 ஆம் பிரிவு | தீயரண் தீர்வு மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை என்பவற்றினை கொள்வனவு செய்யும் போது முற்பணக்கொடுப்பனவு உத்தரவாதம் எடுக்கப்படாமல் 50 சதவீதமான முற்பணக்கொடுப்பனவு வங்கியால் செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 5.4.8 ஆம் பிரிவு | தீயரண் தீர்வினை கொள்வனவு செய்யும் போது |

ஒப்பந்தத்தின் செயற்பாடற்ற தன்மைக்கு எதிராக நிறுவன பாதுகாப்பிற்காக செயல்திறன் பாதுகாப்பு பெறப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 258,665,059 வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 298,196,538 ஆன வரிக்கு முன்னரான தேறியலாபத்தினை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 39,531,479 முன்னேற்றமொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வின் போது நடப்பு ஆண்டில் குத்தகை வட்டி வருமானம் ரூபா 60,517,918 ஆல் அதிகரித்தமை மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் ருபா 59,564,837 ஆல் அதிகரித்தமை மேற்படி முன்னேற்றத்தில் பிரதானமான தாக்கமளித்திருந்தன.

நிதிசார் விளைவுகளில் தனிநபர் ஊதியம், வரிச் செலவினங்கள் மற்றும் பெறுமானத்தேய்வினுடைய திருத்தங்களைக் கருத்திற் கொண்ட பின்னர் முன்னைய ஆண்டிற்கான ரூபா 488 மில்லியன் பெறுமதிச் சேர்க்கையுடன் ஒப்பிடுகையில் ரூபா 564 மில்லியன் மீளாய்வாண்டிற்கான வங்கியின் பெறுமதிச் சேர்க்கையாக காணப்பட்டது. மேலும் கம்பனியின் பெறுமதி சேர்க்கை ரூபா 76 மில்லியனால் முன்னேற்றமடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், துறை ரீதியான விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வங்கியினுடைய முக்கியமான சில கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சராசரியாக உரிமம் பெற்ற சிறப்பு வாய்ந்த வங்கியினுடைய விகிதங்களான 3.76 சதவீதம் மற்றும் 9.3 சதவீதம் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் முறையே உயர்ந்த தேறிய வட்டி எல்லை 8.51 சதவீதம் மற்றும் தேறிய இலாப வீதம் 35.74 சதவீதம மீளாய்வாண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ii) வட்டி வருமான விகிதத்தின் மீதான வட்டி செலவினம் 8.86 சதவீதமாக பிரதிபலிக்கின்றது. இது சராசரியாக உரிமம் பெற்ற சிறப்பு வாய்ந்த வங்கியினுடைய விகிதமான 66.13 சதவீதத்தை விட குறைவாக உள்ளது.

(iii) சராசரி சொத்துக்கள் மீதான வருவாய் வீதமானது 3.34 சதவீதமாக வங்கியால் பதியப்பட்டுள்ளது. இது துறை ரீதியான விகிதமான 1 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது. இருந்த போதிலும் உரிமையாண்மை மீதான வருவாயானது துறை ரீதியான விகிதத்தை விட குறைவாக உள்ளது.

(iv) 2017 திசெம்பர் 31 இல் 37.2 சதவீதம் உயர்ந்த அளவிலான செயற்பாடாற்ற கடன் விகிதமாக அவதானிக்கப்பட்டிருந்தது. இது சராசரியாக உரிமம் பெற்ற சிறப்பு வாய்ந்த வங்கியினுடைய விகிதமான 3.22 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது.

(v) 2017 திசெம்பர் 31 இல் 83.96 சதவீதம் வங்கியினுடைய மொத்த மூலதனத்தின் போதுமான தன்மை விகிதம் ஆகும். இது 11.25 சதவீதமான குறைந்தபட்ச தேவையை விட மிக அதிகமாக உள்ளது.

(vi) வங்கியினுடைய திரவ சொத்து விகிதம் 2017 திசெம்பர் 31 இல் குறைந்தபட்ச தேவைப்பாடான 20 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மேலும் 1,429.62 சதவீதத்தால் அதிகரித்து உள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

வங்கியினால் கூட்டிணைந்த திட்டம் ஒன்று பிரதேச அபிவிருத்தி வங்கியுடனான இணைதல் எதிர்பார்க்கப்பட்டதனால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

2017 ஆம் ஆண்டிற்கான தயாரிக்கப்பட்ட வியாபார திட்டத்தில் விபரிக்கப்பட்ட முக்கிய செயல்திறன் சுட்டிகளுக்கு எதிரான வங்கியின் உண்மையான செயலாற்றல் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

(அ) வங்கியின் கடன் தொகுதியினை ரூபா 4,533 மில்லியன் வரை அதிகரிக்க வங்கி திட்டமிட்ட போதிலும், நிதி அமைச்சினால் 2017 நிதி ஆண்டு இறுதியில் வங்கியின் மொத்த கடன் கூடையினை ரூபா 4,200 ஆக வரையறுக்கும் படி அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 31 திசெம்பர் 2017 இல் வங்கியின் மொத்த கடன்களும் முற்பணங்களும் ரூபா 4,037 மில்லியன் ஆகும். எனவே ரூபா 163 மில்லியன் இலக்கை அடைய வங்கி தவறியுள்ளது.

(ஆ) வங்கியின் கடன் தொகுதியினை ரூபா 66 மில்லியன் வரை அதிகரிக்க வங்கி திட்டமிட்ட போதிலும் 31 திசெம்பர் 2017 இல் அடகு தொகுதியானது ரூபா 35 மில்லியன் ஆகும். இது இலக்கை விட ரூபா 31 மில்லியன் குறைவானது ஆகும். வுங்கியின் விளக்கத்தின் படி, கடன் தொகுதியின் நிலுவை தொகையை ரூபா 4,200 மில்லியன் ஆக குறைக்கும் படி நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் காரணமாக இலக்கை அடைய முடியவில்லை என்பதாகும்.

(இ) வங்கியின் நிலையான வைப்புக்களை ரூபா 406 மில்லியன் வரை அதிகரிக்க வங்கி திட்டமிட்ட போதிலும் 31 திசெம்பர் 2017 இல் நிலையான வைப்பு தொகை ரூபா 87 மில்லியன் ஆகும். இது வருடாந்த இலக்கில் 21 சதவீதத்தை மட்டுமே பிரதிபலிக்கின்றது.

(ஈ) வங்கியின் சேமிப்பு வைப்புக்களை ரூபா 317 மில்லியன் வரை அதிகரிக்க வங்கி திட்டமிட்ட போதிலும் 31 திசெம்பர் 2017 இல் சேமிப்பு வைப்பு தொகையானது ரூபா 293 மில்லியன் ஆகும். இது இலக்கை விட ரூபா 24 மில்லியன் குறைவானது ஆகும்.

(உ) செயலற்ற முற்பண நிலுவையினை ரூபா 1, 091 மில்லியனாக குறைக்க வங்கி திட்டமிட்ட போதிலும் 31 திசெம்பர் 2017 இல் உண்மை நிலுவை ரூபா 1,478 மில்லியன் ஆகும். செயலற்ற கடன் விகிதமானது 31 திசெம்பர் 2017 இல் 36.6 சதவீதம் ஆகும். இது வருடாந்த இலக்கை விட மிகையான அதிகரிப்பாகும்.

(ஊ) கல்வி கடன் திட்டங்களை மேம்படுத்துவதற்காக கல்வி நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்தவும், புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்திட திட்டமிட்டிருந்த போதிலும் வங்கிக்கும் கல்வி நிறுவனங்களுக்குமிடையில் எந்தவொரு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்படவில்லை. மேலும் இலக்கு கடன்

தொகை ரூபா 50 மில்லியனாக இருந்த போதிலும் ரூபா 5 மில்லியன் பெறுமதியான ஒரு கடன் மட்டுமே 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது.

(எ) வங்கியானது 2017 ஆம் ஆண்டில் புத்தாக்க முதலீடாக நுன்நிதி நிறுவனங்களுக்கு கடன் வழங்க திட்டமிட்டிருந்ததுடன் இலக்கு கடன் தொகை ரூபா 1, 250 மில்லியன் ஆக இருந்த போதும் ரூபா 300 மில்லியன் பெறுமதிக்கு இரண்டு கடன்கள் மட்டுமே 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) வங்கியானது பால் பண்ணை விவசாயிகளுக்கு மரக்கறி மற்றும் பழங்களின் பயிர்ச்செய்கைகளுக்கு கடன் வசதிகளை வழங்க திட்டமிட்டிருந்தது. இது ரூபா 100 மில்லியனை 100 வாடிக்கையாளர்களுக்கு வழங்க இலக்கிடப்பட்டிருந்த போதிலும் இத்திட்டத்தின் கீழ் ரூபா 71.42 மில்லியன் 123 வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. வங்கி 71 சதவீத இலக்கை மட்டுமே அடைய கூடியதாக இருந்தது.

(ஐ) கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 500 மில்லியன் இலக்கிடப்பட்டிருந்தது. இருப்பினும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 109.6 மில்லியன் தொகை 22 வாடிக்கையாளர்களுக்கு கடனாக வழங்கப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அம்பாந்தோட்டை கட்டிடமானது 01 ஆகஸ்ட் 2014 முதல் வைத்தியர் விடுதிக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்த போதிலும் வங்கிக்கும் மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் நாயகத்துக்கும் இடையிலான குத்தகை ஒப்பந்தம் கணக்காய்வு திகதியான 20 ஜீலை 2018 வரை கையெழுத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) வங்கியினால் குத்தகை வசதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்கான குத்தகை கொடுப்பனவு மே 2011 இல் முடிவுற்ற போதிலும் ரூபா 749,812 மேலதிகக் கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது கணக்காய்வு திகதியான 20 ஜுலை 2018 வரை வங்கியால் மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) மூத்த குடிமக்களுக்கான நிலையான வைப்புக்களுடன் தொடர்புடைய 2017 ஆம் ஆண்டின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டிற்காக பெற வேண்டிய வட்டி தொகை ரூபா 1,921,014 கணக்காய்வு திகதியான 20 ஜுலை 2018 வரை பொதுத்திறைசேரியிலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) செயற்பாட்டு குத்தகையின் கீழ் வங்கியால் பயன்படுத்தப்பட்டிருந்த 10 வாகனங்கள் மற்றும் 22 மோட்டார் பைக்குகள் வங்கியில் காணப்பட்டிருப்பதுடன் ஆகஸ்ட் 2013 இல் ரூபா 56,000 மற்றும் ரூபா 123,200 கிரயமாக கணக்குகளில் எடுக்கப்பட்டிருந்தது.

(v) சபைக்கூட்ட அறிக்கைகள் வங்கியால் முறையாக மற்றும் விரிவான முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. எனவே குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் தொடர்பான தகவல்களை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியவில்லை.

(vi) வங்கிக்கான பாதுகாப்பு சேவையினை வழங்குவது தொடர்பான உடன்படிக்கை 31 திசெம்பர் 2016 இல் முடிவடைந்திருந்த போதிலும் தொடர்புடைய தரப்பினருடன் உடன்படிக்கையை புதுப்பித்தல் தொடர்பான நடவடிக்கைகள் கணக்காய்வு திகதியான 20 ஜுலை 2018 வரை வங்கியால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) வங்கிக்கும் வரையறுக்கப்பட்ட அபான்ஸ் சுற்றுச்சூழல் சேவைகள் (தனியார்) நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்திடப்பட்ட சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தம் 14 மே 2013 இல் முடிவடைந்த போதிலும் கம்பனியால் சேவை இன்று வரை வழங்கப்படுகின்றது. உடன்படிக்கை கணக்காய்வு திகதியான 20 ஜுலை 2018 வரை வங்கியால் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) வங்கியின் தேநீர் தயாரிப்பு சேவைக்கென ஒரு சேவை வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் மாதாந்த செலவு ரூபா 110,589 ஆகவும் காணப்பட்டது. இது அதிகாரமளிக்கப்பட்ட எல்லையான ரூபா 100,000 ஐ விட அதிகமானதாகும். மேலும் வங்கிக்கும் சேவை வழங்குனருக்கும் இடையில் எந்தவொரு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படாது 2017 ஆம் ஆண்டில் ரூபா 5,074,737 பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ix) பொலன்னறுவை பிரிவு நடாத்தப்பட்ட கட்டிடத்தின் பகுதியொன்றை அகற்றுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் புதிய அமைவிடத்திற்கு நகர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் அதே வளாகத்தில் பிரிவானது தற்போதும் செயற்படுகின்றது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மொத்த சொத்துக்களில் 44 சதவீதம் மட்டுமே கடன்கள் மற்றும் முற்பணங்களை பிரதிபலிக்கும் அதேவேளை, வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்காது மொத்த சொத்துக்களின் 56 சதவீதத்தை ஏனைய வங்கிகளின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருந்தது. இது வங்கியின் முதன்மை குறிக்கோளான தொழில்துறை விவசாயம் வணிகம் கட்டுமானம் மற்றும் பிறநிறுவனங்களின் ஊக்குவிப்பு ஸ்தாபிப்பு விரிவுபடுத்தல் நவீனமயமாக்கல் மறறும் அபிவிருத்திக்கு உதவுதல் என்பதிலிருந்து முரண்பாடாக உள்ளது.

(ii) 2017 ஆம் ஆண்டிற்கான மொத்த வட்டி வருமானமான ரூபா 834 மில்லியனில் கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவதனுடாக உழைக்கப்பட்ட வட்டி வருமானம் 49 சதவீதம் அல்லது ரூபா 405 மில்லியனாக மட்டுமே காணப்பட்டது. அத்துடன் அமெரிக்கடொலர் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீள்மதிப்பின் மூலம் உழைக்கப்பட்ட வெளிநாட்டு பணம் ரூபா 12 மில்லியனாக இருந்தது. மேற்குறிப்பிட்ட வருமானம் இல்லாவிடின் வங்கியானது ரூபா 62 மில்லியன் செயற்பாட்டு இழப்பிற்குள்ளாகி இருக்கும்.

(iii) வருட இறுதியில் உள்ளவாறு வங்கியால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 4,037 மில்லியனாக இருந்தபோதிலும் அத்திகதியில் வைப்புக்களின் பெறுமதி ரூபா 403 மில்லியனாக இருந்தது. வங்கியின் வைப்புத்தளம் மிகவும் குறுகலாக, மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களின் 10 சதவீதத்தை பிரதிபலிக்கின்றது.

(iv) 31 திசெம்பர் 2017 இல் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களின் நிலுவை ரூபா 4,037 மில்லியனாகவும் அதில் ரூபா 1,478 மில்லியன் அல்லது 36.6 சதவீதம் செயலற்றதாகவும் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

## 4.4 நிதியத்தின் குறைப்பயன்பாடு

அபிவிருத்தி நிதி திணைக்களத்தில் 11 ஒக்டோபர் 2013 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் பிரகாரம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் கடன்களுக்கான உத்தரவாதமாக வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிக்காக அரசாங்கத்தால் ரூபா 200 மில்லியன் வழங்கப்பட்டது. அத்தோடு வருடாந்தம் 7 சதவீத வட்டியில் பிரதேச அபிவிருத்தி வங்கியில் அந்த ரூபா 200 மில்லியன் முதலீடு செய்யப்பட வேண்டும் என அரசாங்கம் தெளிவாக குறிப்பிட்டிருந்தது. இருப்பினும் அந்த பணம் பிரதேச அபிவிருத்தி வங்கியில்உத்தரவாதமாக முதலிடப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு பெறக்கூடியதாக இருக்கவில்லை. அத்துடன் அவ்வாறான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான கடன் திட்டங்கள் எவையும் நிறுவப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பணியாளர் நிர்வாகம்

(i) பிரதம இடர் உத்தியோகத்தர், உள்ளக கணக்காய்வு தலைவர் மற்றும் மனிதவள தலைவர் போன்ற பிரதான முகாமைத்துவ பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) பிரதான முகாமை ஆளணியை தெரிவு செய்வதற்கும், நியமிப்பதற்கும் ஒரு ஆட்சேர்ப்பு நடைமுறை காணப்படவில்லை.

(iii) முக்கிய முகாமை ஆளணியின் ஓய்வின் போது வாரிசு ஏற்பாடுகளை வழங்குவதற்கு வங்கிக்கான புதுப்பிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வாரிசு திட்டம் ஒன்று காணப்படவில்லை.

(iv) மனிதவள திணைக்களத்தால் ஊழியர்களுடைய செயற்பாட்டு மதிப்பீட்டு தாள்கள் மதிப்பீடு செய்யப்படவில்லை.

(v) விசாரணை அறிக்கைகள் மற்றும் முடிவுகளின் பிரதிகள் குறிப்பிட்ட ஊழியர்களின் தனிநபர் கோவைகளில் காணப்பட்டிருக்கவில்லை.

(vi) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி 6 சாரதிப்பதவிகள் வெற்றிடமாக 31 திசெம்பர் 2017 இல் காணப்பட்டிருந்த போதும் வங்கியில் 12 நபர்கள் சாரதிகளாக பணிக்கமர்த்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்நது.

(vii) சாரதிகளுக்கு இயல்பான கடமைகளை தவிர ஏனைய கடமைகளையும் வங்கி ஒப்படைத்திருந்தது. மற்றும் சில சந்தர்ப்பங்களில் சாரதிப்பதவிகள் வேறு பதவிகளாக மாற்றப்பட்டிருந்தது.

## 4.6 வங்கியின் சந்தைப் பங்கு

ஐந்து ஆண்டுகளுக்கான வங்கியின் சந்தைப் பங்கு தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | வைப்புக்கள் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | | | சந்தைப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|
| | வைப்புக்கள் | | கடன்கள் மற்றும் முற்பணங்கள | | | |
| | வங்கி ரூபா மில்லியன் | ஏனைய வங்கிகள் ரூபா மில்லியன் | வங்கி ரூபா மில்லியன் | ஏனைய வங்கிகள் ரூபா மில்லியன் | வைப்பு % | கடன் % |
| **2017** | 403 | 974,574 | 4,037 | 639,706 | 0.04 | 0.63 |
| **2016** | 421 | 846,145 | 3,676 | 533,230 | 0.05 | 0.69 |
| **2015** | 520 | 764,155 | 3,334 | 456,961 | 0.07 | 0.73 |
| **2014** | 380 | 709,671 | 2,732 | 440,670 | 0.05 | 0.62 |
| **2013** | 229 | 617,081 | 2,422 | 347,117 | 0.04 | 0.70 |

மேற்குறிப்பிட்ட விபரங்களின் படி வங்கியின் சந்தைப் பங்கானது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வைப்புக்களின் அடிப்படையில் 20 சதவீதமும் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களின அடிப்படையில் 9 சதவீதமும் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது.

## 5. நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி

### 5.1 நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளின் அடைவு

ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2030 ஆம் ஆண்டு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி மீளாய்வின் போது நடப்பு ஆண்டில் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்பாடுகள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பான விழிப்புணர்வு காணப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கிடையில் 5 சதவீதம் தொடக்கம் 79 சதவீதம் வரையான வீச்சில் முக்கியமான நேர் மற்றும் எதிர் முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தது. இது பாதீடானது வங்கியின் வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுபாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

### 6.2 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

2015 ஆம் ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டபடி பொதுப்பேரேட்டின் பெறுமதிக்கும் சரக்கு சரிபார்த்தல் படிவத்தின் அடிப்படையிலான பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடான ரூபா 6,826,769 இருந்நது. இவ்விடயம் இன்று வரை தீர்க்கப்படவில்லை மற்றும் பொதுப்பேரேட்டின் பெறுமதிக்கும் சரக்கு சரிபார்த்தல் படிவத்தின் அடிப்படையிலான பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக ரூபா 6,786,989 அவதானிக்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட வங்கியின் முறைமைகள் மற்றும் கட்டுபாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்குக் காலம் வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| கணக்கீடு | - | நீண்ட காலமாக நிலுவையிலுள்ள வரவு மற்றும் செலவு மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | - | பரிவர்த்தனைகள் சரியான கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | - | நிதிச்சேவைகள் மற்றும் தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி மீது பெறுமதி கூட்டப்பட்ட வரி குறித்த துல்லியமான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | - | பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டு பதிந்த மீதிகளுக்கும் பொதுப்பேரேட்டு மீதிகளுக்கும் இடையிலான இருப்பு வேறுபாட்டினை இணக்கப்பாடு செய்வதற்கு சமரசம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| கடன் நிர்வாகம் | - | அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகளுடனான இறுக்கமான இணக்கப்பாடு அவதானிக்கப்படவில்லை. |
| செயற்பாட்டு முறைமை | - | நிர்ணயிக்கப்பட்ட பெறுகை வழிகாட்டு நெறிகள் கடைப்பிடிக்கப்படுதல் அவதானிக்கப்படவில்லை. |
| | - | வங்கியின் முறைமையிலுள்ள கட்டுப்பாடுகளினைப் பலப்படுததுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |